## கோவை தெற்கு மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிற்கான தேர்தல்! வேட்பு மனுத் தாக்கல்

### தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் கோவை தெற்கு மாவட்டத்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.அமுதபாரதி அவர்கள், பொள்ளாச்சி தெற்கு நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், கழக சட்டதிட்ட விதிகளின்படி, 'ஒருவருக்கு ஒரு பொறுப்பு' என்ற அடிப்படையில், எம்.அமுதபாரதி அவர்கள், தான் வகித்து வந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்;

கோவை தெற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2026, பிப்ரவரி 20 (வெள்ளிக்கிழமை) அன்று ரூ.25000/– வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் கோவை தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பகுதி/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 17.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திருவாரூர் மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிற்கான தேர்தல்! தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் திருவாரூர் மாவட்டத்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர். எஸ்.பாண்டியன் அவர்கள், திருத்துறைப்பூண்டி நகரக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து வருவதால், கழக சட்டதிட்ட விதிகளின்படி, 'ஒருவருக்கு ஒரு பொறுப்பு' என்ற அடிப்படையில், ஆர்.எஸ்.பாண்டியன் அவர்கள், தான் வகித்து வந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்; திருவாரூர் மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2026, பிப்ரவரி 17 (செவ்வாய்க்கிழமை) அன்று ரூ.25000/– வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்..**" என்று தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

திருவாரூர் மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கு **ஜி.பாலசுப்ரமணியன்** அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**திருவாரூர் மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக**

**திரு. ஜி. பாலசுப்ரமணியன்**, வடக்கு தெரு, தலையாமங்கலம், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் - 614 016 அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 17.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## வேலூர் தெற்கு மாவட்டம்

# பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல்! தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு!

"கடந்த 4.11.2025 அன்று கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செம்மையுற நடைபெற்றிடவும் வேலூர் மாவட்டம், வேலூர் வடக்கு, வேலூர் தெற்கு என இரண்டு மாவட்டங்களாக பிரிக்கப்பட்டதில், வேலூர் தெற்கு மாவட்டத்தில், மாவட்டப் பொருளாளர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால், வேலூர் தெற்கு மாவட்டம், பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2026, பிப்ரவரி 17 (செவ்வாய்க்கிழமை) அன்று ரூ.25000/–வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**"என்று தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

வேலூர் தெற்கு மாவட்டம், மாவட்டப் பொருளாளர் பொறுப்புக்கு **எஸ்.தாமோதரன்** அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**வேலூர் தெற்கு மாவட்ட பொருளாளராக,**

**திரு. எஸ்.தாமோதரன்,** பி.இ., பழைய எண்.9/1, புதிய எண்.16, புதுத் தெரு, சங்கரன்பாளையம், வேலூர், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 17.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## தி.மு.க. விவசாய அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

### தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 23-2-2026 திங்கட்கிழமை காலை 10.00 மணி அளவில், தஞ்சை மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் அறிவாலயத்தில்" விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்
2. எதிர்வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தல் - குறித்து.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16.02.2026

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி.

## திரு.வி.க நகர் மண்டலத்திற்குட்பட்ட பணிமனை அலுவலகம் - 70

# இடமாற்றம்!

### சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, பிப்.18-

திரு.வி.க நகர் மண்டலத்திற்குட்பட்ட பணிமனை அலுவலகம் - 70 20.02.2026 (வெள்ளிக்கிழமை) முதல் கீழ்க்கண்ட புதிய முகவரியில் செயல்படும்.

வ. எண் பணிமனை எண் தற்போதுள்ள அலுவலக முகவரி புதிய அலுவலக முகவரி 1 70 எண்.3, வடிவேலு 2வது குறுக்கு தெரு, பெரம்பூர், சென்னை-600 011. சென்னை மாநகராட்சி கட்டிடம், எண்.20, ராஜா தெரு, பெரம்பூர், சென்னை-600 011.

எனவே, பொதுமக்கள் குடிநீர் மற்றும் கழிவுநீர் சம்பந்தப்பட்ட புகார்கள் மற்றும் குடிநீர் வரி / கட்டணம் செலுத்தவும் மேற்கண்ட புதிய முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி எண்கள் உதவிப் பொறியாளர் - 8144930070, துணை பகுதிப் பொறியாளர் - 8144930216

## சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# தொகுதிவாரியாக 'வெல்லும் தமிழ் பெண்கள்' பயிற்சிப் பாசறைக் கூட்டம்!



### மாவட்ட கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிக்கை!

தமிழ்நாட்டுப் பெண்களை உலகளவில் 'வெல்லும் தமிழ்ப் பெண்களாக' மாற்றியுள்ள கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, சேலம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட எடப்பாடி, மேட்டூர், சங்ககிரி ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளிலும், திராவிட மாடல் 2.0 கழக ஆட்சி அமைந்திடும் வகையில், வெல்லும் தமிழ்ப் பெண்கள் வீடு வீடாக மகளிர் பரப்புரை மேற்கொள்ள பயிற்சி பாசறை கூட்டம் சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி தலைமையில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெற உள்ளது.

| தொகுதி | தேதி / நேரம் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| எடப்பாடி தொகுதி | 18.02.2026 புதன்கிழமை | காலை 9.00 | ஸ்ரீ கிருஷ்ண மஹால், சித்தூர் |
| மேட்டூர் தொகுதி | 18.02.2026 புதன்கிழமை | மதியம் 02.30 | J.K.B. மஹால் கருமலைகூடல் |
| சங்ககிரி தொகுதி | 19.02.2026 வியாழக்கிழமை | காலை 9.00 | R.K.S. மஹால், குப்பனூர் சங்ககிரி |

அதுசமயம் தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அந்தந்த தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், ஒவ்வொரு வாக்குச் சாவடிகளிலும் நியமிக்கப்பட்டுள்ள பாக மகளிர் பொறுப்பாளர் ஒருவர் வீதம் அனைத்து வாக்கு சாவடிகளிலும் இருந்தும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.**
செயலாளர்,
சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.

## அண்ணா பொறியியல் கல்லூரியில் பயிலும்

# 1,657 கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சென்னை,பிப்.18-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று முன்தினம் (16.02.2026) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் , கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின் கீழ், அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரிகளைச் சார்ந்த 1,657 கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.




தமிழ்நாடு முதலமைச்சர் 05.01.2026 அன்று சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் உயர்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக "உலகம் உங்கள் கையில்" என்னும் மாபெரும் திட்டத்தில் 20 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் முதற்கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினனிகளை கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

அவ்வாறாக, தமிழகம் முழுவதும் உயர்கல்வி பயிலும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்று, கிண்டி பொறியியல் கல்லூரி, கட்டடக்கலை மற்றும் திட்டமிடல் கல்லூரி, அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரிகளைச் சார்ந்த 1,657 மாணவர்களுக்கு மடிக்கணினிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மண்டலக்குழுத் தலைவர் ஆர்.துரைராஜ், அண்ணா பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் வெ. குமரேசன், கிண்டி பொறியியல் கல்லூரி புலமுதல்வர் முனைவர் பி. ஹரிஹரன், கல்லூரி நிர்வாகிகள், பேராசிரியர்கள், மாணவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.


## பெருநகர சென்னை மாநகராட்சி
### தகவல் தொழில்நுட்ப மையம்

த. தொ. நு. மை. ந. க. எண். சி1/353/2026

**குறுகிய மின் ஒப்ப அறிவிப்பு**

ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறைமுறையில் முதுநிலை முறை மேலாளர் தகவல் தொழில்நுட்ப மையம் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

Development of cloud-Based attendance management system, social media related analytical services for NULM staff and management of GCC official's inspection & fine details using cloud infrastructure for a period of 6 months.

| பணியின் மதிப்புத் தொகை | ஒப்ப முன் வைப்புத் தொகை |
|---|---|
| ரூ.49,47,741/- | ரூ.49,477/- |

ஒப்ப படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம் நிறைவு செய்யப்பட்ட ஒப்பபுள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : **26.02.2026** அன்று பிற்பகல் **02.00** மணி ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **26.02.2026** அன்று பிற்பகல் **3.00** மணி.

செ.ம.தொ.இ/1169/ஒப்பந்தப்புள்ளி/ 2026

**முதுநிலை முறை மேலாளர்**


## சென்னை செயிண்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியில் -

# மாபெரும் தமிழ்க் கனவு - அமைச்சர் கோவி.செழியன் தலைமையுரை!

### எழுத்தாளர் ஆண்டாள் பிரியதர்ஷினி சிறப்புச் சொற்பொழிவாற்றுகிறார்!

சென்னை, பிப். 18 -

சென்னை செயிண்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியில் மாபெரும் தமிழ்க் கனவு 200 ஆம் நிகழ்வு இன்று 18.02.2026- புதன்) காலை 9 மணியளவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் ரேஷ்மி சத்தார்த் ஜகடே, திட்ட விளக்கம் மற்றும் நோக்க வுரையாற்றுகிறார். உயர்கல்வித் துறை அரசுச் செயலாளர் பொ.சங்கர் வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தலைமையுரையாற்றுகிறார்.

எழுத்தாளர் ஆண்டாள்பிரியதர்ஷினி 'மாபெரும் சபைதனில்' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுகிறார்.

கல்லூரிக் கல்வி ஆணையர் எ.சுந்தரவல்லி நன்றி கூறுகிறார்.

## திருநெல்வேலி மத்திய மாவட்டம்

# திருநெல்வேலி மேற்கு மாநகரம், தச்சநல்லூர் வடக்கு பகுதி 28-வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு!

திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி மேற்கு மாநகரம், தச்சநல்லூர் வடக்கு பகுதி 28-வது வட்டக் கழகச் செயலாளர் கிருஷ்ணன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **ஐ.ஆறுமுகம்** (28, முத்துராமலிங்கபுரம் தெரு, திருநெல்வேலி டவுண் - 627 006.) அவர்கள் 28-வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 17.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# மாங்குடி மதியழகன்

### பிப்ரவரி 18 (1974)



**கழகம் துவங்கப்பட்ட போதே உறுப்பினராகியதுடன், 1950களில் அயல்நாடான பர்மாவில் கழகத்தை வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.**

**தமிழகம் திரும்பிய பின்னர், 1960களில் இராமநாதபுரம் மாவட்ட துணைச் செயலாளராகவும் – முதுகுளத்தூர் வட்டச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.**

**முதுகுளத்தூர் ஒன்றிய பெருந்தலைவராகவும் – மாநில பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு உறுப்பினராகவும், முதுகுளத்தூர் நிலவள வங்கி தலைவராகவும், ஆனையூர் கூட்டுறவு வங்கி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, சட்டநகல் எரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு மதுரை மத்திய சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**